## சுருக்கம்

சிறுபான்மையினர் நலம் – கல்வி – பொதுப்பரிசுகள் 10 மற்றும் 12–ம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் முதல் மூன்று நிலைகளில் தேர்ச்சி பெறும் சிறுபான்மையின மாணவ/மாணவிகளுக்கு மாவட்ட அளவில் வழங்கப்படும் பரிசுத் தொகையினை உயர்த்தி வழங்குதல் ஆணைகள் – வெளியிடப்படுகின்றன.

---

### பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (சிந.ஆபி) துறை

அரசாணை(நிலை)எண் 108 நாள் 8 .10. 2012

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண் 59, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 26.5.2008.
2. அரசாணை (நிலை) எண் 57, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 10.7.2010.
3. அரசாணை (நிலை) எண் 6, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 18.1.2012.
4. சிறுபான்மையினர் நல ஆணையர், சென்னை–2, கடித எண் டிஎம்2/570/2012, நாள் 15.5.2012.

------

**ஆணை:-**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையின்படி, 2008–09 ஆம் ஆண்டு முதல், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மாணவ/ மாணவிகளுக்கு வழங்குவது போன்றே சிறுபான்மையின மாணவ/ மாணவிகளுக்கும் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் மாநில மற்றும் மாவட்ட அளவில் முதல் மூன்று நிலைகளில் உயர் மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெறுபவர்களுக்கு கீழ்க்கண்டவாறு பரிசுத் தொகைகள் வழங்க அனுமதிக்கப்பட்டது.

| பரிசுகள் | வகுப்பு | முதல் பரிசு (ரூ.) | இரண்டாம் பரிசு (ரூ.) | மூன்றாம் பரிசு (ரூ.) |
|---|---|---|---|---|
| <u>மாநில அளவில்</u> | | | | |
| (ஒரு மாணவர் | 12 | 10,000 | 8,000 | 6,000 |
| ஒரு மாணவி) | 10 | 5,000 | 4,000 | 3,000 |
| <u>மாவட்ட அளவில்</u> | | | | |
| (ஒரு மாணவர் | 12 | 3,000 | 2,000 | 1,000 |
| ஒரு மாணவி) | 10 | 1,500 | 1,000 | 500 |

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையின்படி மாநில அளவிலான பரிசுத்தொகை பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் மாணவ/மாணவிகளுக்கு ஒரே நேரத்தில் கீழ்க்கண்டவாறு உயர்த்தப்பட்டது.

| மாநில அளவில் | உயர்த்தப்பட்ட பரிசுத் தொகை | |
|---|---|---|
| | 12 ஆம் வகுப்பு (ரூ.) | 10 ஆம் வகுப்பு (ரூ.) |
| முதல் பரிசு | 50,000/– | 25,000/– |
| இரண்டாம் பரிசு | 30,000/– | 20,000/– |
| மூன்றாம் பரிசு | 20,000/– | 15,000/– |

3. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையின்படி, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர்/ சீர்மரபினர் மாணவ/ மாணவியருக்கு மட்டும் ஏற்கனவே வழங்கப்பட்டு வந்த மாவட்ட அளவிலான பரிசுத் தொகைகள் கீழ்க்கண்டவாறு உயர்த்தி ஆணையிடப்பட்டது.

| | மாவட்ட அளவில் (ஒவ்வொரு மாவட்டம்) | | |
|---|---|---|---|
| | முதல் இடம் (ரூ.) | இரண்டாம் இடம் (ரூ.) | மூன்றாம் இடம் (ரூ.) |
| 12–ஆம் வகுப்பு | 6000/– | 4000/– | 2000/– |
| 10–ஆம் வகுப்பு | 3000/– | 2000/– | 1000/– |

4. மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அமைச்சர் அவர்களால் சட்டப்பேரவையில் 9.5.2012 அன்று நடைபெற்ற 2012–13 ஆம் ஆண்டிற்கான பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் மானிய கோரிக்கையின்போது பொதுப்பரிசுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் மாவட்ட அளவில் முதல் மூன்று நிலைகளில் தேர்ச்சி பெறும் சிறுபான்மையின மாணவ/ மாணவிகளுக்கு வழங்கப்படும் பரிசுத் தொகைகள் இரு மடங்காக உயர்த்தி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

5. அதன் அடிப்படையில், சிறுபான்மையின மாணவ/மாணவிகளையும் ஊக்குவிக்கும் பொருட்டு, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மாணவ/ மாணவிகளுக்கு உயர்த்தப்பட்டது போன்றே, சிறுபான்மையின மாணவ/ மாணவிகளுக்கும், ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் மாவட்ட அளவிலான பரிசுத் தொகைகளை கீழ்க்கண்டவாறு உயர்த்தி வழங்குமாறு சிறுபான்மையினர் நல ஆணையர் அரசைக் கோரியுள்ளார்.

| வகுப்பு | நிலை | தற்போது வழங்கப்பட்டு வரும் பரிசுத் தொகை (ரூ.) | உயர்த்தக் கோரும் பரிசுத் தொகை (ரூ.) |
|---|---|---|---|
| 10 ஆம் வகுப்பு | முதல்<br>இரண்டாம்<br>மூன்றாம் | 1500<br>1000<br>500 | 3000<br>2000<br>1000 |
| 12 ஆம் வகுப்பு | முதல்<br>இரண்டாம்<br>மூன்றாம் | 3000<br>2000<br>1000 | 6000<br>4000<br>2000 |

6. சிறுபான்மையினர் நல ஆணையரின் கருத்துருவை அரசு நன்கு பரிசீலித்து அதனை ஏற்று 2012–13 நிதியாண்டு முதல் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ/ மாணவிகளுக்கு பரிசுத்தொகை உயர்த்தப்பட்டதைப் போல், மாவட்ட அளவில் 10 ஆம் வகுப்பில் முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவதாக அதிக மதிப்பெண் பெறும் சிறுபான்மையின மாணவ/ மாணவியருக்கு முறையே ரூ.3,000/–, ரூ.2,000/– மற்றும் ரூ.1,000/– எனவும், அவ்வாறே 12 ஆம் வகுப்பு மாணவ/ மாணவியருக்கு முறையே ரூ.6,000/–, ரூ,4,000/– ரூ.2,000/– எனவும் பரிசுத்தொகைகளை உயர்த்தி வழங்க அரசு ஆணையிடுகிறது.

7. மேலே பத்தி 6–ல் அனுமதிக்கப்பட்டுள்ள செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்.

> “2225– ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 03 பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் –001 நெறிப்படுத்தலும் நிருவாகமும் –I திட்டத்தில் சேராதது AE சிறுபான்மையினர் நல இயக்ககம் – 59 பரிசுகளும் வெகுமதிகளும்’’
>
> (து.தொ.கு 2225 03 001 AE 5909)

8. மேலே பத்தி 6–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள தேவைப்படும் கூடுதல் தொகை ரூ. 5,76,000/–, 2012–13 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதி ஒதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். 2012–13 ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீடு/ இறுதி திருத்த நிதி ஒதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படுவதை எதிர்நோக்கி, இச்செலவினத்தை மேற்கொள்ள சிறுபான்மையினர் நல ஆணையருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. 2012–13 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு/இறுதி திருத்த நிதி ஒதுக்கத்திற்கான முன்மொழிவுகள் நிதித்துறைக்கு அனுப்பும்போது இத்தொகையினையும் சேர்த்து அனுப்புமாறு சிறுபான்மையினர் நல ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. இவ்வாணை நிதித்துறையின் ஒப்புதலுடன் அதன் அ.சா.கு எண்.43/நிதி (கூ.செ)/2012, நாள் 3.8.2012 –ன்படி வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேடு எண். 868 (எண்ணூற்று அறுபத்தெட்டு)

**(ஆளுநரின் ஆணைப்படி)**

தங்க கலியபெருமாள்,
அரசுச் செயலாளர்

பெறுநர்
சிறுபான்மையினர் நல ஆணையர், சென்னை –2
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்,
அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபானமையினர் நல அலுவலர்கள்,
மாநில கணக்காயர், சென்னை–18/35.
மாநில கணக்காயர் (தணிக்கை I), சென்னை –6.

சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை –5.

<u>நகல்</u>

முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
நிதித்(பிமிபி/வ.செ.பொது II)துறை, சென்னை –9.
இருப்புக் கோப்பு/உதிரி நகல்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

**பிரிவு அலுவலர்**